# ஸ்ரீ காஞ்சீ காமகோடி ஜகத்குரு
# ஸ்ரீ புதுப் பெரியவர்களின் கேரள விஜயம்

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் கேரள விஜய யாத்திரை ஏப்ரல் 16 முதல் 42 நாட்கள் நீடித்திருந்து மே மாதம் 26ஆம் தேதி சிற்றூர்க் கிராமத்தில் முடிவடைந்தது. அவர்கள் சிற்றூரில் பூஜைகளை முடித்துக்கொண்டு கேரளத்தின் எல்லையைக் கடந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த பொள்ளாச்சிக்குக் கால் நடையாகப் பயணமானார்.

சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் திரள்திரளாகக் குழுமிப் புதுப் பெரியவர்களுக்கு அமோகமான வரவேற்பளித்துத் தங்களுக்குக் காமகோடி பீடத்தினிடம் இருக்கும் பக்தி விச்வாஸங்களையும் அந்தப் பீடத்தை அலங்கரிப்பவரிடம் வைத்திருக்கும் பக்தியோடு கூடிய அன்பையும் கௌரவத்தையும் வெளியிட்டனர்.

திருவானைக்கா கும்பாபிஷேகத்திற்குச் சென்றிருந்ததைத் தவிர்த்தால் இப்பொழுது செய்துவரும் தேசசஞ்சாரம்தான் புதுப்பெரியவர்கள் மட்டுமாகப் பூஜையுடனும் பரிவாரங்களுடனும் செய்யும் முதலாவது பாதயாத்திரை. தமது கேரள யாத்திரை வரிசையாக நடந்தேறியதில் தாம அடைந்த மகிழ்ச்சியைச் சிற்றூர் விட்டுக் கிளம்பும்பொழுது தெரிவித்துக்கொண்டார்.

புதுப்பெரியவர்களுடைய வருகையை முன்னிட்டு அவர் செல்லும் ஒவ்வோர ஊரும் வரவேற்புக் கமான்களாலும் வாழை மரங்களாலும் பச்சைத் தோரணங்களாலும அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. ஹர சங்கர ஜய ஜய சங்கர என்று எழுதியிருக்கும் துணிகளைத் தெருவுகளின் குறுக்கே கட்டி வைத்திருந்தாகள்

ஸ்வாமிகளை ஒவ்வோர் ஊரின் எல்லையிலும் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்று மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். இந்த ஊர்வலங்கள் அலங்கரித்த யானையுடனும் கேரளத்திற்கே உரியதான செண்டை வாத்தியத்துடனும் பஞ்ச வாத்தியத்துடனும் நடைபெற்றன. வருகையை அறிவிக்க அதிர்வேட்டுகளும் முழங்கின. செல்லும் வழிகளில் பிராம்மணர்கள் பூர்ணகும்பம் கொடுத்தும் மற்றவர்கள் கேரளத்தில் மட்டும் செய்யப்படும 'நிறபறை' என்ற மாியாதை செய்தும் தம்முடைய பக்தியை வெளியிட்டனர். ஜாதி மதபேதமின்றி மக்கள் திரளாக வந்து ஸ்வாமிகளைத் தரிசனம் செய்து ஆனந்தம் அடைந்தனர்.

புதுப்பெரியவர்களுடைய இந்தப் பாதயாத்திரை 1970 டிசம்பர் ஐந்தாம் தேதி ஆரம்பமாயிற்று. அன்று அவர் காஞ்சிபுரத்திலிருந்து வெம்பாக்கம் சென்றார். அங்கிருந்து அவர் வட ஆர்க்காட்டிலுள்ள பல ஊர்களில் தங்கித் தர்மபுரி வழியாகச் சேலத்திற்கு 5-2-1971 அன்று விஜயம் செய்தார். அங்கு இரண்டு வாரங்கள் முகாம்செய்தார். மேட்டூர் ஈரோடு பவானி முதலிய ஊர்களுக்குச் சென்று கோயம்புத்தூர



Scanned with CamScanner

26-3-1971 அன்று அடைந்தார். கோயம்புத்தூர் முகாம் 12-4-71 வரையில் நீடித்திருந்தது. பிறகு மதுக்கரை மார்க்கமாகப் பயணம் செய்து கேரளத்தி லுள்ள கஞ்சிக் கோட்டையை ஏப்ரல் 15-ஆம் தேதி அடைந்தார்.

அதன்பிறகு கேரளதேச யாத்திரை ஆரம்பமாயிற்று. 16-4-1971 புதுப்பெரியவர்கள் பாலக்காடு வட்டாரத்தைச் சேர்ந்த நூரணி கிராமத் துக்கு விஜயம் செய்தார். அவரைப் பாலக்காட்டின் எல்லையாகிற கோட்டை மைதானத்திலேயே மகாஜனங்கள் பூர்ணகும்பத்துடன் எதிர் கொண்டு வரவேற்றார்கள். நூரணியிலுள்ள எல்லா அக்ரஹாரங்களுக்கும் பக்கத்திலுள்ள தொண்டிகுளம் கிராமத்திற்கும் வாத்தியகோஷங்க ளுடன் ஊர்வலம் சென்று நூரணியிலுள்ள கல்யாண மண்டபத்தில் பூஜாதிகளை நடத்தினர். நூரணி தோரணங்களால் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பூஜைகளைப் பார்க்கவும் ஸ்வாமிகளைத் தரிசிக்கவும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

குருவாயூர் செல்லுமுன் ஆதிசங்கர பகவத்பாதரின் அவதார ஸ்தலமான காலடியைத் தரிசிக்க எண்ணி நூரணியில் ஒரு நாள் மட்டும் தங்கியிருந்து பயணத்தை மேற்கொண்டு துவக்கினர். ஆலத்தூர், பட்டிக்காடு, திருச்சூர், சாவக்காடு மார்க்கமாகக் காலடியை அடைந்து அங்கிருந்து திருச்சூரைச் சேர்ந்த பூங்குன்றம் என்று அழைக்கப்படும் புஷ்பகிரிக்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீசங்கர ஜயந்தி உற்சவத்தைத் திருச் சூரில் முடித்துக்கொண்டு குருவாயூர் மகாக்ஷேத்திரத்தை ஏப்ரல் 30-ஆம் தேதி அடைந்தார்.

சமீபத்தில் தீவிபத்தில் அழிந்து போன ஸ்ரீ குருவாயூரப்பன் க்ஷேத்திரத்தின் வெளிப்பிராகாரத்தைப் புதிய முறையில் கட்டும் திருப் பணிக்குப் புதுப்பெரியவர்கள் அடிக்கல் நாட்டினர். இந்த வைபவத்தைக் கண்டு களிக்கக் கேரளத்தின் நானா பாகத்திலிருந்தும் வெளியூர்களிலிருந் தும் பக்தர்கள் லக்ஷக்கணக்கில் கூடியிருந்தனர். இந்த விழா வெற்றி கரமாக நடந்தேறியது.

குருவாயூரிலிருந்து த்ரிப்பயார் முதலிய ஊர்களுக்குச் சென்று அலநதூருக்கு மறுபடியும் வந்து இரண்டு நாட்கள் தங்கி, பல்லாவூர் கொல்லங்கோடு முதலிய ஊர்கள் வழியாகப் பாலக்காடு சாத்தப்புரம் கிராமத்திற்கு 19-5-1971 காலையில் வந்து சேர்ந்தார். இங்கு மூன்று நாட்கள் முகாம் செய்தார். இம் மூன்று நாட்களில் பக்கத்திலுள்ள கிராமங் களுக்கும் விஜயம் செய்து மக்களுக்குத் தரிசனம் அளித்தார். ஒலவக் கோடு சமீபமுள்ள கல்லேன் குளங்கர என்னும் இடத்திலுள்ள பிரசித்தி பெற்ற அம்மன் கோயிலையும் தரிசித்தார். வளர்ந்து வரும் ரெயில்வே காலனிக்கும் சென்று வந்தார்.

சாத்தப்புரத்திலிருந்து கிளம்பிய புதுப்பெரியவர்கள் ராமநாதபுரம் அக்கிரகாரத்தில் 22-5-71 சனியன்று தங்கிவிட்டு, ஒற்றப்பாலம் சென்று திரும்புகையில் சந்திரசேகரபுரம், பல்லசேன என்னும் ஊர்களில் தங்கிச் சிற்றூர் வந்து சேர்ந்தார். அங்கே 26-5-1971 சாயங்காலம் வரையில் தங்கி நெல்லேப்பள்ளி வழியாகப் பொள்ளாச்சிக்குப் பயணமானர். இத்துடன் கேரள விஜய யாத்திரை பூர்த்தி அடைந்தது.



Scanned with CamScanner

இந்த விஜய யாத்திரையில் புதுப்பெரியவர்கள் சென்றவழியிலும் தங்கும் இடங்களிலும் உள்ள அநேக கோயில்களைத் தரிசித்தார். இவை களில் குருவாயூர் த்ரிப்பயார் போன்ற கோயில்கள் மிகப் பிரசித்தி வாய்ந்த வைகள். அவர்கள் தங்கின பல இடங்களில் தர்ம உபநயனங்களும் நடைபெற்றன. மக்களிடையே கடவுள்பக்தி வளர்ந்து அவர்கள் ஹிந்து தர்மத்தையும் கலாசாரத்தையும் வாழ்க்கையில் கடைப்பிடித்து வரவேண்டிய அவசியத்தை விளக்கி அருளுரைகள் சென்ற எல்லா இடங்களிலும் நிகழ்த்தினர்.

சுமார் 40 வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் (பெரியவர்கள்) கேரளம் விஜயம் செய் திருந்தார். அதன்பிறகு இம் மடத்தின் ஆசார்யர் இப்பொழுதுதான் கேரளம் வந்துள்ளார். இவ் வருகையால் மக்களிடையே உணர்ச்சி பெருக்கெடுத்தது. ஆண்களும் பெண்களும் ஆயிரக்கணக்கில் கூடி வந்து புதுப்பெரியவர்களைத் தரிசனம் செய்து அவர்கள் செய்யும் பூஜை களையும் கண்டு களித்துத் தீர்த்தம் பிரசாதம் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியடைந்தனர்.

---

காஞ்சீ ஜகத்குரு ஸ்ரீ புதுப்பெரியவர்கள் விஜயயாத்திரையை முடித் துக்கொண்டு ஜூன் 27ம் தேதி காஞ்சி வந்து சேருகிறார்கள்.

* * *

காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ பெரியவர்கள் சித்தூர் ஜில்லா கார்வேட் நகர் கிராமத்தில் முகாம் செய்திருக்கிறார்கள்.

* * *

இந்தவருட சாதுர்மாஸ்ய சங்கல்பம் ஜூலை 8ம் தேதி கார்வேட் நகரில் நடக்கலாம் என்று தெரிகிறது.

* * *